ஈழமண் எரிகின்ற போதிலே எங்களின்
வீரமாதெனில் வரவேண்டும்
வரவேண்டும் வரவேண்டும் வரவேண்டும்
தமிழ் ஈழமண் எழுகின்ற போதிலே உங்களின்
பாழையை நீயும் தரவேண்டும்
தரவேண்டும் தரவேண்டும் தரவேண்டும்

எம்தேசத்துக்காய் என்றென்றும் 2

எம்தேசத்துக்காய் என்றென்றும்
எங்கள் கோசமே மூச்சாகும் மூச்சாகும் மூச்சாகும்
புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்பதே எங்களின் உயிராகும் உயிராகும் உயிராகும்
கருவேங்கை உடல் இங்கு எரிகின்ற போதில்
கரிகாலன் என எண்ணி விழி சிந்தக்கூடும் 2
இருநாடு இருளோடு விடிகாலையாகும்
திசையாவும் தமிழீழ கொடியேறி ஆடும்  ஆ..ஆ..ஆ

ஈழமண் எரிகின்ற போதிலே எங்களின்
வீரமாதெனில் வரவேண்டும்

தாயே
தாயவளின் மேனியிலே காயம் எதற்கு
அதை தந்தவனை சுட்டு எரித்தல் எங்கள் பொறுப்பு
பாயும் கருவேங்கையென நாங்கள்
பற்றி எரிகின்றதென நீங்கள் அறிவீர்
கொத்த வயே கொத்தவயே கோடி மின்னல் ஆனவளே
நெற்றியிலே பொட்டு வைத்து எம்மைவிட்ட கொத்தவயே
நாளை எம்  மேனியை கீறிட போறோம்
நம்மவை மீதிலே வென்றிட போறோம்
கம்பை உடுக்குடன் பகைகொண்டு ஊது
நந்திக்கடல் மடி சங்கெடுத்து  ஊது

போக விடை தாரும் அடை காத்த உறவே
எமை பெற்ற அழைத்த அன்னை தந்தையான உறவே 2
வேகம் தந்து எம்மை வழற்கின்ற இந்த உறவே நாங்கள்
போன பின்பும் வாழும் ஈழ உறவே
சோகம் இல்லை சோகம் இல்லை சொல்லிப்போக நேரம் இல்லை
தாகம் தமிழ் ஈழம் அது நெஞ்சில் அன்றி வாயில் இல்லை
நாளை எம்  மேனியை கீறிட போறோம்
நம்மவை மீதிலே வென்றிட போறோம்
கம்பை உடுக்குடன் பகைகொண்டு ஊது
நந்திக்கடல் மடி சங்கெடுத்து  ஊது

ஈழமண் எரிகின்ற போதிலே எங்களின்
வீரமாதெனில் வரவேண்டும்